கள்ளக்குறிச்சி மாவட்ட திராவிடர் கழகம் சார்பில் நடைபெற்ற பெரியாரியல் பயிற்சி பட்டறை கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் திராவிட மாடல் ஆட்சி இன்றைக்கு உலகம் போற்றக்கூடிய அளவிற்கு வளர்ந்து இருக்கிறது, ஆகவே தமிழ்நாட்டு மக்களின் பேராதரவுடன் மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைக்கும் என்று சிறப்புரை ஆற்றினார், இதில் மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர திராவிடர் கழக நிர்வாகிகள் பலர் உடன் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திராவிட மாடல் ஆட்சி இன்றைக்கு உலகம் போற்றக்கூடிய அளவிற்கு வளர்ந்துள்ளது!

தமிழ்நாட்டு மக்களின் பேராதரவுடன் தி.மு.க. மீண்டும் ஆட்சி அமைக்கும்!

கள்ளக்குறிச்சியில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பேட்டி

கள்ளக்குறிச்சி,மே 3- கள்ளக்குறிச்சியில் திராவிடர் கழகம் சார்பில் நடைபெற்ற பெரியாரியல் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு பேசிய கி.வீரமணி, செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது அவர் பேசுகையில் நடந்து முடிந்த தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டவனில் நானும் ஒருவன். மக்களைப் பொருத்தவரை எந்தத் தேர்தலிலும் இல்லாத அளவிற்கு, இந்தத் தேர்தலில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தி இருப்பார்கள் என்பதை நாங்கள் கண்டுள்ளோம்.

பிரச்சாரத்தில் தாய்மார்கள் அதிகளவில் வந்து, நாங்கள் பேசியதை ஆர்வத்தோடு கேட்டது மட்டுமல்லாமல், அதை உள்வாங்கிய முறையின் அடிப்படையில், அதில் அவர்களுக்கு எவ்வளவு விழிப்புணர்வு இருக்கிறது, திராவிட மாடல் ஆட்சியில் எல்லையற்ற மகிழ்ச்சியை அவர்கள் எப்படி பெற்றிருக்கிறார்கள், நன்றி உணர்ச்சியை அவர்கள் எப்படி வெளிகாட்டக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பதையெல்லாம் நாங்கள் நேரில் பார்த்து, தெரிந்துகொள்ள ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்தது. அப்படிப்பட்ட தாய்மார்களில் பெரும் பகுதி திராவிடல் மாடல் ஆட்சிக்கு வாக்களித்திருக்கிறார்கள் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடமளிக்காமல், சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, திராவிட மாடல் ஆட்சியில் பயனடைந்த மக்கள், மீண்டும் திராவிட மாடல் ஆட்சி வரவேண்டும் என்று வாக்களித்திருக்கிறார்கள் திராவிட மாடல் ஆட்சி இன்றைக்கு உலகம் போற்றக்கூடிய அளவிற்கு வந்திருக்கிறது எனத் தெரிவித்தார்.

1971 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 184 இடங்களை பெற்று திமுக வரலாறு படைத்தது, இதோடு முடிந்தது இனி தி.மு.க. ஆட்சிக்கு வராது என்று ஆருடம் கணித்தவர்கள் எல்லாம் அடையாளம் தெரியாமல் ஓடிவிட்டார்கள், துண்டைக் காணோம், துணியை காணோம் என்று 1971 ஆம் ஆண்டு நடைபெற்ற அதே நிலை மே 4ஆம் தேதிக்கு பிறகு வரும், கோட்டைக்கு அனுப்புபவர்களை, ஆட்சியில் அமரவைப்பவர்களை ஆட்சிக்கு அனுப்பி வைப்பார்கள். காட்சிக்கு அனுப்ப வேண்டியவர்களை திரும்ப, காட்சிக்கு திரும்ப செய்வார்கள். இந்த நிலைதான் நிலவும், மக்களுக்கு நல்லது செய்வதைப்போல பா.ஜ.க.வினர் நடிப்பார்கள். ஆனால், நல்லதை செய்ய மாட்டார்கள். அவர்கள் விஷம் கலந்த உருண்டையில் தேனை கலந்து வைத்திருப்பார்கள். அதை அம்பலப்படுத்துவதற்கு தமிழ்நாடு தயாராக இருக்கிறது.

இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களில் உள்ள மக்கள் பாஜகவை நம்பி ஏமாந்தாலும், தமிழக மக்கள் ஒருபோதும் ஏமாறமாட்டார்கள்.

இதற்குக் காரணம், தமிழ்நாடு பெரியார் நாடு, இங்கு அடிமைகளுக்கு இடமில்லை. சுதந்திரச் சிந்தனையாளர்களுக்கும், போராட்டம் செய்யக்கூடிய அமைதி பூங்காவில் மதவெறி, ஜாதி வெறியை தூண்டி, கலவரம் உண்டாக்கி, தங்கள் ஆதிக்கத்தை மறைமுகமாக புகுத்தலாம் என்ற பா.ஜ.க.வின் திட்டம் இங்கு, ஒருபோதும் நடக்காது. கன்னி வெடிகளாக இருந்தாலும், அந்த கன்னி வெடிகளை தூக்கி வெளியே போடக் கூடிய ஆற்றல், திராவிட இயக்கத்திற்கு உண்டு. அதனடிப்படையில், ஒரு நல்ல செய்தியை இன்னும் இரண்டு நாட்களில் நீங்கள் கேட்பீர்கள் என்று கூறினார். மேலும் கருத்துக்கணிப்பு அல்ல, அது கருத்து திணிப்பு என்றும், அ.தி.மு.க.தான் ஆட்சி அமைக்கும் எனவும் எடப்பாடி பழனிசாமி கூறி யிருக்கிறாரே என்று கேட்ட கேள்விக்கு பதிலளித்த கி.வீரமணி, கனவு காண எல்லாருக்கும் உரிமை உண்டு. ஆனால், எந்தக் கனவு நிறைவேறுகிறது என்பதுதான் மிக முக்கியம்.

ஆசைகள் குதிரைகளானால் யார் வேண்டுமானாலும் சவாரி செய்யலாம் என தெரிவித்த நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மீது தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் நன்மதிப்பு அதிகரித்துள்ளது என்றும், தி.மு.க. ஆட்சி தொடரவே மக்கள் விரும்புகின்றனர் என்றும், தமிழ்நாட்டில் ஒரு நிலையான அரசு வேண்டும், வளர்ச்சி வேண்டும், மக்கள் நல திட்டங்கள் வேண்டும், இந்த மூன்று எதிர்பார்ப்புகள் தான் தமிழக முழுவதும் எதிரொலிக்கிறது, இந்த மூன்றையும் கடந்த முறை அளித்த தி.மு.க. தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி அரசு அடுத்த 5 ஆண்டுகளுக்கும் தொடரும், ஆகவே தமிழ்நாட்டு மக்களின் பேராதரவுடன் மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைக்கும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் செய்தியாளர்களிடையே கூறினார்.

பெரியாரியல் அறிஞர்

வே.ஆனைமுத்துவின் மூத்த மருமகன் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, மே 3- பெரியாரியல் அறிஞர் தோழர் வே.ஆனைமுத்து அவர்களின் மூத்த மருமகன், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் சீனு அரிமாப்பாண்டியன் (அரிகிருட்டிணன்) அவர்கள் 1.5.2026 வெள்ளிக் கிழமை விடியற்காலை 4.00 மணிக்கு சென்னை போரூர் இராமச்சந்திரா மருத்துவ மனையில் இயற்கையில் கலந்தார்.

இச்செய்தியறிந்ததும் கழகத்தினர் அன்னாரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

இன்று (3.5.2026 - ஞாயிறு) காலை அவரது உடல் புதுவை இல்லத்திற்குக் கொண்டு வரப்பட்டு மாலை வீரவணக்க இறுதிஊர்வலம் நிகழும்.

மே1 தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கோவை பெரியகடை பகுதி, உக்கடம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள கோவை மாவட்ட ஆட்டோ தொழிற்சங்கம் முன்பு கோவை மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர், கோவை வடக்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வன் தொ.மு.ச. கொடியேற்றி வைத்து பொது மக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். இதில் மாநகர் மாவட்ட துணை செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், பகுதி கழக பொறுப்பாளர்கள் மார்க்கெட் மனோகரன் (பெரியகடை), ஆq்வி.பக்குருதின் (கோட்டைமேடு), தொழிலாளர் அணி மாநில துணை செயலாளர் தொ.மு.ச. நா.தமிழ்ச்செல்வன், வட்ட கழக செயலாளர்கள் கோபி, ரங்கராஜ், தினேஷ்குமார் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி வாக்கு எண்ணிக்கை முகவர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் நடைபெற்றது . இந்த கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி.கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார். இந்த கூட்டத்தில் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், வேட்பாளர் டாக்டர் எஸ்.டி.ஜெயலெட்சுமி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வணிக சிலிண்டர் விலை உயர்வை திரும்பப் பெறவேண்டும்!

மக்கள் மீது சுமையை திணிக்கிறது பா.ஜ.க. அரசு!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்!

சென்னை, மே 3- வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை உயர்வை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது. ஒன்றிய பா.ஜ.க. அரசின் மோசமான நிர்வாகத்தினால் ஏற்பட்ட பாதிப்பை, மக்கள் மீது திணிப்பதற்கு கண்டனத்தை தெரிவித்துள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இதனால், உணவகங்களை மட்டுமே நம்பியுள்ள மக்கள், மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் கவலை தெரிவித்துள்ளன.

உடனடியாக இந்த விலை உயர்வை திரும்பப் பெற வேண்டும் என்றும் இந்திய கம்யூனிட்ஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. – கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு

தேர்தலில் பணியாற்றிய கழக நிர்வாகிகள் - கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கு நன்றி!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சாவூர், மே.3. தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட திருவிடை மருதூர், கும்ப கோணம், பாபநாசம் சட்ட மன்ற தொகுதிகளில் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணி கட்சியின் வேட்பாளர் வெற்றிக்காக அரும்பாடு பட்டு வாக்கு சேகரித்த கழக நிர்வாகி களுக்கும், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளுக்கும் நன்றி தெரிவித்து மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : நடைபெற்று முடிந்த 2026 சட்டமன்ற பொது தேர்தலில் மாண்புமிகு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட கும்ப கோணம் சட்டமன்ற தொகுதியில் நானும் (சாக்கோட்டை க.அன்பழகன்), திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதியில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அவர்களும் உதயசூரியன் சின்னத்திலும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளராக ஏ.எம்.ஷாஜகான் அவர்களும் போட்டியிட்டோம்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர்களை வெற்றிப்பெற செய்து மக்கள் போற்றும் திராவிட மாடல் ஆட்சியின் 2.0 தொடர எங்களுக்காக வாக்கு சேகரித்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் மற்றும் கொளுத்தும் வெயிலை பொருட்படுத்தாமல், இரவு பகல் பாராமல் பிரச்சாரத்தில் ஈடுப்பட்ட தஞ்சை வடக்கு மாவட்டத்தை சேர்ந்த மு.ன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும், மாவட்ட, மாநில கழக நிர்வாகி களுக்கும், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களுக்கும், மாநகர, ஒன்றிய, பகுதி , பேரூர், வார்டு மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகளுக்கும், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகளுக்கும், கழக பிரதிநிகளுக்கும், மு.ன்னாள் - இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கும், கூட்டணி கட்களின் மாவட்ட தலைவர்கள், தொண்டர்கள், கழகத்தின் உடன்பிறப்புகள் அனைவருக்கும் என் மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

முரசொலி விநியோகப் பிரிவு

ஆர்.பழனி முதலாம் ஆண்டு நினைவு நாள்!

செங்கல்பட்டு, மே.3- முரசொலி விநியோகப் பிரிவில் பணியாற்றி வந்த ஆர்.பழனி வயது 38 (03.05.2025) சென்ற ஆண்டு மறைவெய்தினார். அதனை ஒட்டி இன்று (03.05.2026 - ஞாயிற்றுக் கிழமை) அவரது முதலாம் ஆண்டு நினைவு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

செங்கல்பட்டு மாவட்டம் வாலாஜாபாத் வட்டம் நெய்யாடுபாக்கம் கிராமத்தில் அவரது இல்லத்தில் உள்ள திருவுருவப் படத்திற்கு அன்னாரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் மலர் மாலை வைத்து நினைவஞ்சலி செலுத்துகின்றனர்.

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில் சுரண்டை நகராட்சி பேருந்து நிலையம் முன்பு மே.1.அன்று உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் மற்றும் ஏற்பாட்டில் 100 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு இலவச சீருடைகள் வழங்கும் நிகழ்வு நடை பெற்றது.இந்நிகழ்வில் தென்காசி சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் டாக்டர். கலை கதிரவன், மாவட்ட பொறுப்பாளர் வே. ஜெயபாலன் ஆகியோர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி,இனிப்புகள் வழங்கி, ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடைகளை வழங்கினர்.நிகழ்வில் நகர பொறுப்பாளர் கணேசன் உள்பட ஒன்றிய,பேரூர் கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள்,கழக உடன் பிறப்புகள்,ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.